செய்தி வெளியீடு எண். 62 நாள். 29.01.2018

## மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் ரூ.65 ஆயிரத்தி 800 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (29.01.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும், இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 50 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் 32 மனுக்களும், சமூக நலத்திட்டம் 10 மனுக்களும், குடும்ப அட்டை 4 மனுக்களும், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலம் 11 மனுக்களும், வேலைவாய்ப்பு 89 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு 9 மனுக்களும், கடனுதவி 5 மனுக்களும், இதரதுறை 22 மனுக்களும், சான்றிதழ் நகல் 6 மனுக்களும், வேளாண்மை / கால்நடைத்துறை / மீன்வளம் 2 மனுக்களும், அடிப்படை வசதி / போக்குவரத்து / சுகாதாரம் 4 மனுக்களும், ஊரக / நகர்ப்புற வளர்ச்சி 38 மனுக்களும் மற்றும் கல்வி 5 மனுக்களும் ஆக மொத்தம் 287 மனுக்கள் பெறப்பட்டது. இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இன்று கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக 3 பயனாளிகளுக்கு தலா ரூ.20 ஆயிரம் வீதம் கால்நடைகளுக்கான ஹைட்ரோபோனிக்ஸ் வளர்க்கும் உபகரணங்களையும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் சார்பாக ஒரு நபருக்கு ரூ.5 ஆயிரத்தி 800 மதிப்பிலான மூன்று சக்கர சைக்களும் மற்றும் நில அளவைகள் மற்றும் பதிவேடுகள் துறை சார்பாக மாதவரம், திருவொற்றியூர், மதுரவாயல் மற்றும் ஆவடி ஆகிய 4 வட்டங்களை சேர்ந்த 57 வருவாய் கிராமங்களுக்கான பராமரிப்பு பணிகளுக்கான தூய ஆவணங்களையும் (நத்தம் சிட்டா, நத்தம் அடங்கல் மற்றும் நத்தம் புலப்படச் சுவடி) ஆகியவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.சீ.ஜானகிராமன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. நாராயணன், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. எஸ்.ஜெயச்சந்திரன் உதவி இயக்குநர் (நிலஅளவை) திரு.இராஜகணபதி மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**